**(1**ம் எதிரி கனகராஜ்**, 2**ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3**ம் எதிரி பிரகாஷ்**,** ஆகிய **1** முதல் **3** எதிரிகள் ஆஜர்

**4** மற்றும் **5** எதிரிகள் ஆஜர் இல்லை**. 4** மற்றும் **5** எதிரிகள் சார்பில் குவிமுச பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு**,** மனு அனுமதிக்கப்பட்டது**.**

**Crl.M.P. 1485** மற்றும் **1486/2024**ல் பிறந்த உத்தரவின் அடிப்படையில் அ**.**சா**.19** சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு**, 1** முதல் **5** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் ஆரம்பகட்ட புலன்விசாரணையை நான்தான் மேற்கொண்டேன். சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். சம்பவ இடம் மண்தரையுடன் கூடிய காடு. நான் சம்பவ இடத்தை பார்வையிட்டபோது, சம்பவ இடத்தில் வாகனங்கள் சென்றதற்கான தடயங்கள் இருந்ததா என்றால் சம்பவ இடத்தில் கார் தடயங்கள் இல்லை. சம்பவ இடத்தின் உரிமையாளரையும், பக்கத்து இடத்தின் உரிமையாளரையும் நான் விசாரிக்கவில்லை. நான் சொன்னபடி, சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயாரிக்கவில்லை என்றும், அவைகளை பின்னர் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரேத விசாரணை சாட்சிகளை நான் சரிவர விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல், எனக்கு பின்னர் வந்த அதிகாரிகளிடம் வழக்குக்கோப்பை ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்